ஆரணிக்கு அருகே உள்ள இந்த அணையை விரிவுபடுத்தி, இன்னும் அதிகமான நிலங்களை விவசாயம் செய்வதற்கு பாசன வசதி செய்து கொடுப்பதற்கு அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : அதுபற்றி தனிக் கேள்வி வேண்டும்.

திரு. க. மு. இராசகோபால் : தலைவரவர்களே, செய்யாற்றில் உத்தரமேரூருக்கு அருகில் கால்வாய்க்குக் கீழே இடமச்சியில் ஒரு அணை கட்டும் திட்டம் நீண்டகாலமாக பரிந்துரையில் இருந்துவருகிறது. இத் திட்டத்தை நிறைவேற்றினால் கிட்டத்தட்ட ஒரு லட்சம் ஏக்கர் நிலம்—20, 30 ஊர்கள்—பாசன வசதி பெறும். செய்யாற்றின் தண்ணீர் இந்த ஆண்டு கூட வீணாகக் கடலில் போய் கலந்தது. ஆகவே, இத் திட்டத்தை நிறைவேற்ற அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவரவர்களே, அதுபற்றிய விபரம் இல்லை.

Kaveripoompattinam.

*** 402 Q.—Thiru N. DENNIS : Will the Hon. the Minister for Public Works be pleased to state whether there are proposals under the consideration of the State Government to develop Kaveripoompattinam in Thanjavur district as a Major Port ?**

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : No, Sir.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவரவர்களே, இந்த அரசாங்கம் பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகத்தை துவக்க இருக்கிறது. ஆகவே, இந்தப் புகார் பட்டினத்தை மீண்டும் பழைய காலத்து—சோழர்கள் காலத்து துறைமுகம்போல மாற்றி அமைக்க ஏற்பாடு செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : ஒரு நல்ல ஆலோசனையை மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள்.

திரு. எ. சுப்பிரமணியம் : தலைவரவர்களே, இதுகுறித்து—இந்தத் துறைமுகத்தை மேம்படுத்துவது பற்றி ஏதாவது ஆய்வு செய்யப்பட்டுள்ளதா ? ஆய்வு நடத்தப்பட்டால் அதன்மீது என்ன முடிவு மேற்கொள்ளப்பட்டது ? வருவாய் பற்றிய விபரத்தை கணக்கிட்டிருக்கிறார்களா ? அதுபற்றிய விபரம் என்ன என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : அப்படி ஒன்றும் ஆய்வு செய்யபபடவில்லை.